**V. NARAYANASAMY**
CHIEF MINISTER
GOVERNMENT OF PUDUCHERRY

सत्यमेव जयते

✆ Off. : 0413-2333399, 2335530
2335328
Fax : 0413-2333135
Res. : 5, Ellaiamman Koil Street
Puducherry-605 001
✆ 0413-2339099
e-mail: cm.pon@nic.in

Date: 17/10/17

# தீபாவளி திருநாள் வாழ்த்து

தீபாவளி திருநாளை நம் நாட்டு மக்கள் தீபஒளி ஏற்றி மிகவிமர்சையாக கொண்டாடுவார்கள். தீபாவளி தினத்தன்று அனைத்து சமுதாய மக்களும் சாதி மத பேதமின்றி உற்றார் உறவினர்களையும் நண்பர்களையும் தீபாவளி வாழ்த்து கூறி இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியை தெரிவித்துக்கொள்கின்றனர்.

தீயவை அகன்று நல்லவை நடை பெற புத்தாடை அணிந்து, பட்டாசுகளை வெடித்து குடும்பத்தினருடன் தீபாவளி திருநாளை நம் புதுவை மாநில மக்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடுவர். தைபொங்களுக்கு அடுத்தாற்போல் மிகவிமர்சியாக கொண்டாடப்படும் விழா தீபாவளி திருநாள்.

இந்த நல்ல நாளில் பெண்கள் விரதமிருந்து தங்கள் குடும்பம் வளமோடு வாழ அம்மனை பிராத்திப்பார்கள்.

சிறிய மாநிலமான புதுச்சேரியில் ஏழை பணக்காரர் என்ற வித்யாசமில்லாமல் கொண்டாடப்படும் விழா தீபாவளி. பாரம்பரியமான இந்த விழாவில் நகரத்தில் வண்ண விளக்குகளால் அலங்கரித்து வீடுகளில் தீபஒளி ஏற்றி தங்கள் வாழ்வு பிராகாசமாக இருக்க வேண்டும் என்று கடவுளை வணங்கி தீபாவளியை நம் மாநில மக்கள் விமரிசையாக கொண்டாடுவர்.

மாநிலத்தில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் வாழ்க்கை வளம்பெற வேண்டும் என்று நாம் ஒருங்கினைந்து பாடுபடும் இந்த வேளையில் மக்கள் நலத்திட்டங்களை முடக்க சிலசக்திகள் செயல்படுகின்றான. அந்த தடைகளை எல்லாம் களைந்து மாநிலத்தில் வளர்ச்சி காணுரவோம் என்று சூளுரையை இந்த நன்னாளில் நாம் அனைவரும் எடுத்துக்கொள்வோம்.

தீபாவளித்திருநாளன்று விவசாயிகள், வியாபாரிகள், தொழிலதிபர்கள், அரசு ஊழியர்கள், தொழிலாளர்கள், மீனவர்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மை சமுதாயத்தினர், இளைஞர்கள், மகளிர், தியாகிகள், மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் எனது தீபாவளித்திருநாள் நல்வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன்.

வே. நாராயணசாமி

(வே. நாராயணசாமி)